


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




செவ்வாய் ❖ மே. 10, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 215 ❖ ரூ.10

## இலங்கையில் வன்முறை - ஆளுங்கட்சி எம்.பி அடித்துக்கொலை

# திக்திக்

## அதிபர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்சே ராஜினாமா செய்த நிலையில், அந்நாட்டின் தலைநகர் கொழும்பு தற்போது போர்க்களமாக காட்சியளிக்கிறது



**கொழும்பு ,மே 10:**

**இலங்கையின் ஆளும் கட்சி எம்.பியும் முன்னாள் அமைச்சருமான அமரகீர்த்தி போராட்டக் காரர்களுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தார்.**

இலங்கை அதிபர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்சே ராஜினாமா செய்த நிலையில், அந்நாட்டின் தலைநகர் கொழும்பு தற்போது போர்க்களமாக காட்சியளிக்கிறது. அரசுக்கு எதிராக இரு மாதங்களாக கடும் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், நேற்று காலை கொழும்புவில் மகிந்தாவின் ஆதரவாளர்கள் அரசுக்கு எதிரான போராட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் வெடித்து வன்முறையாக மாறியது. இதன் காரணமாக அங்கு அவசர நிலை பிரகணடப்படுத் தப்பட்டது. சில மணிநேரங்களிலேயே பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதாக மகிந்தா அறிவித்தார்.

மகிந்தா ராஜினாமாவை அறிவித்த நிலையிலும், அதிபர் கோத்தபய ராஜபக்சே ராஜினாமா செய்யாததால் கொழும்புவில் வன்முறை சம்பவங்கள் வேகமாகப் பரவி வருகின்றன. இதுவரை மட்டும் கொழும்புவில் நடைபெற்ற வன்முறையில் 150க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். மேலும், முன்னாள் அமைச்சர் ஒருவரின் காரை மக்கள் குளத்தில் மூழ்கடித்துள்ளனர்.

போராட்டம் கட்டுக்கடங்காமல் பரவி வருவதால், விடுமுறையில் உள்ள காவலர்கள் உடனடியாக பணிக்கு திரும்புமாறு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது. ஆளும் கட்சி எம்.பியும் முன்னாள் அமைச்சருமான அமரகீர்த்தி என்பவரின் வாகனத்தை போராட்டக்காரர்கள் மறித்துள்ளனர். அவர்கள் மீது எம்பி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள் பதில் தாக்குதல் நடத்தியதில் எம்பி அமரகீர்த்தி உயிரிழந்துள்ளதாக காவல் துறை தெரிவித்துள்ளது.

மேலும்,மோராட்டுவா பகுதி மேயர் சமன் லால் பெர்னாட்டோ என்பரின் வீட்டை போராட்டக்காரர்கள் தீ வைத்து கொளுத்தியதாக காவல்துறை கூறியுள்ளது. இவர் போராட்டக் காரர்களுக்கு எதிராக அரசு ஆதரவாளர்களை திரட்டிய ஆத்திரத்தில் இந்த சம்பவம் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் நாடு முழுவதும் மதுக்கடைகள் மூடப்படுவதாகவும். ரயில்கள் இயக்கப்படாது எனவும் அந்நாட்டு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அத்துடன் அரசுக்கு ஆதரவாக நபர்களை ஏற்றிச்சென்ற பேருந்துக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்துள்ளனர். போராட்டம் கலவரமான நிலையில் இலங்கையின் பல்வேறு பகுதிகள் போர்களமாக காட்சியளிக்கிறது. கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் பொருளாதார உதவி செய்துவரும் நிலையில், இந்தியாவும் இலங்கையில் ஏற்படும் நகர்வுகளை கூர்ந்து கவனித்து வருகிறது.




▶ புதுக்கோட்டை மாவட்டம் முத்துடையான்பட்டி டாஸ்மாக் கடை எண் 6692ல் அரசு நிர்ணயித்த விலைக்கு மதுபானங்கள் விற்கப்படுகிறது என விளம்பரம் கடையின் முன்பு ஒட்டி வைத்துக்கொண்டு அங்கு பணியாற்றும் ஊழியர்கள் பாட்டில் ஒன்றுக்கு வழக்கம்போல் பத்து ரூபாய் கூடுதலாக வசூலிக்கின்றனர்.அதை தட்டிக்கேட்கும் மதுபிரியர்களுடன் தொடர்ந்து வாக்குவாதத்திலும் ஈடுப்பட்டு வருகின்றனர். இந்த பிரச்சனை தொடர்ந்தால் அங்கு விரைவில் அசம்பாவிதம் நடக்க வாய்ப்புள்ளது.

## திருட்டு பைக்கில் சென்று மொபைல் பறிப்பு: தலை சிதைந்து 2 பேர் உயிரிழப்பு

**சென்னை ,மே 10:**

சென்னையில் திருட்டுபைக்கில் சென்று இளைஞர் ஒருவரிடம் செல்போனை பறித்துக்கொண்டு தப்பியோடிய 2 இளைஞர்கள் தலை நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர் அவர்கள் யார் என்பதை அடையாளம் காணுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தனியார் நிறுவனத்தில் அக்கவுண்டன்டாக பணியாற்றி வரும் கார்த்திக் என்பவர் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாரிமுனை ராஜாஜி சாலையில் இந்தியன் வங்கி அருகே நின்று கொண்டிருந்த போது இருசக்கர வாகனத்தில்வந்தஇருவர் கார்த்திக்கிடமிருந்து செல்போனை பறித்து விட்டு, விலை உயர்ந்த இருசக்கர வாகனத்தில் தப்பி சென்றுள்ளனர்.

ராஜாஜி சாலையிலிருந்து போர் நினைவு சின்னம் வலது புறம் திரும்பி கொடிமர சாலையில் அதிவேகமாக சென்றுள்ளனர். அப்போது முத்துசாமி பாலத்திற்கு சில மீட்டர் தூரம் முன்பாகதவறான திசையில் சென்று சுற்று சுவரில் மோதி பல மீட்டர் தூரம் தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

விபத்தில் தலை சிதைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இருவரையும் பொதுமக்கள் தகவலின் பேரில் போலீசார் மீட்டு ராஜிவ்காந்தி மருத்துவமனையில் அனுமதித்தனர். அளவுக்கதிகமான குடிபோதையில் இருந்த இருவரையும் மருத்துவர்கள் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதித்து சிகிச்சையளித்து வந்தனர்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இரண்டுஇளைஞர்களும் நேற்று உயிரிழந்தனர். வழக்கு பதிவு செய்த கொத்தவால்சாவடி போக்குவரத்து புலனாய்வு போலீசார் விசாரணை மேற்கொண்டதில் இறந்த இருவரும் திருட்டு இருசக்கர வாகனத்தில் சென்று மொபைல் பறிப்பில் ஈடுப்பட்டது தெரியவந்தது. விபத்தில் இறந்த இரண்டுஇளைஞர்களின் முகமும் முழுவதும் சிதைந்துள்ளதால் அவர்களை அடையாளம் காண்பதில் சிரமம் எழுந்துள்ளது. மேலும் இறந்த இளைஞர்களின் பெயர், அவர்கள் எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என போக்குவரத்து புலனாய்வு போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், காவல்துறை தலைமை இயக்குனர் சைலேந்திரபாபு, மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் சந்தித்து, 2022- 2023 ஆம் ஆண்டிற்கான காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## புதிய முதலீடுகளை ஈர்க்க முதல்வர் மு.க.ஸ்டாலின் இங்கிலாந்து, அமெரிக்கா சுற்றுப்பயணம்

**சென்னை ,மே 10:**

இந்த பயணத்தின் மூலம் மேலும் பல நிறுவனங்களுடன் பேசி, தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்க உள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின்இங்கிலாந்து, அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது. முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்ற பிறகு முதல் முறையாக துபாய் நாட்டில் நடைபெற்ற தொழில் கண்காட்சியில் கலந்துகொண்டார். இதனை தொடர்ந்து அங்குள்ள தொழில் அதிபர்களை சந்தித்து தமிழகத்தில் முதலீடு செய்ய வருமாறு அழைப்புவிடுத்திருந்தார். முதலமைச்சரின் துபாய் பயணம் வெற்றிகரமாக அமைந்த நிலையில், ஜூன் மாத இறுதியில் லண்டனுக்கும், ஜூலை முதல் வாரத்தில் அமெரிக்காவுக்கும் அவர் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தநிலையில் வருகிற ஜூன் மாத இறுதியில் லண்டனுக்கும், ஜூலை மாதம் அமெரிக்காவுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசுமுறைசுற்றுப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். இந்த பயணத்தின்மூலம்மேலும் பல நிறுவனங்களுடன் பேசி, தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்க உள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே தனிவிமானத்தில் சென்ற முதலமைச்சரின் துபாய் சுற்றுப்பயணத்தை எதிர்க்கட்சிகள் விமர்சித்து வரும் நிலையில், அவர் வெளிநாடு செல்ல இருப்பது குறிப்பிடத்தக்கது.



▶ புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட தாட்கோ அலுவலகம் மூலம், அன்னவாசல் மற்றும் இலுப்பூர் பேரூராட்சிகளை சேர்ந்த 14 தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளை கலெக்டர் கவிதா ராமு வழங்கினார். அருகில் டிஆர்ஓ செல்வி, தாட்கோ மேலாளர் முத்துரெத்தினம் உள்ளிட்டோர் உள்ளனர்.

## நவீன இயற்பியலின் பிதாமகர் ஐன்ஸ்டீன் ஓவியத்தை தத்ரூபமாக வரைந்த கல்லூரி மாணவர்

**புதுக்கோட்டை ,மே 10:**

திருச்சியில் படித்துவரும் கல்லூரி மாணவர் இயற்பியலின் பிதாமகர் என்று அழைக்கப்படும் ஐன்ஸ்டீன் ஓவியத்தை வரைந்திருப்பது பாராட்டைபெற்றுள்ளது.



புதுக்கோட்டை திருக்கோகர்ணம்பகுதியில் வசிக்கும்கல்லூரிமாணவர் சுப்ரபாரதி கண்ணன் ஸ்ரீவெங்கடேஸ்வரா பள்ளியின் முன்னாள் மாணவர். பள்ளியில் படிக்கிற காலத்திலேயே ஓவியம் வரைவதில் ஆர்வமுள்ள இவர் பல்வேறு பத்திரிகைகளில் ஓவியங்கள் வரைந்ததோடு பள்ளி ஆண்டுமலரிலும் பல்வேறு ஓவியப் போட்டிகளிலும் ஓவியம் வரைந்து பரிசு பெற்றுள்ளார்.

சிறு வயதிலேயே அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டதால் திருச்சியில் உள்ள புனித வளனார் கல்லூரியில் முதலாம் ஆண்டு இயற்பியல் படித்து வருகிறார். கல்லூரிப் படிப்பின் போதும் வேறு சித்தனைகளுக்கு இடம் கொடுக்காமல் ஓய்வு நேரங்களை ஓவியம் வரைவதில் செலவிடுகிறார்.

இத்தனைக்கும் இவர் முறையாக ஓவியப் பயிற்சிகள்எதுவும்பெறாமல் உள்ளத்தின் கற்பனைகளை ஓவியங்களாக தீட்டிவருகிறார். நவீன இயற்பியலின் பிதாமகர் ஐன்ஸ்டீன் படத்தை படிக்கும் அறையிலும் உள்ளத்திலும் மாட்டிவைத்திருக்கும் மாணவர் சுப்ரபாரதி கண்ணன் சமீபத்தில் வாட்டர் கலரில் வரைந்த ஐன்ஸ்டீன் படம் சமூக வலைத்தளங்களில்பெரிதும் பாராட்டப்படுகிறது.

இளம் ஓவியர் சுப்ரபாரதியின் தந்தையார் ஆனந்தவிகடன், குமுதம் கணையாழி, தமிழ் இந்து, காமதேனு போன்ற இதழ்களில் கவிதைகள் எழுதிவரும் கவிஞர் காசாவயல் கண்ணன் என்பதுகுறிப்பிடத்தக்கது. தத்ரூபமாக வரைந்த இயற்பியல் அறிஞர் ஐன்ஸ்டீன் ஓவியம் சமூக வலைத்தளங்களிலும் பள்ளி,கல்லூரிஆசிரியர்கள் மாணவர்களால்பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

## சுடுகாட்டுக்கு வழி கேட்டு கிராம மக்கள் சாலை மறியல் இரண்டு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

**கோட்டைப்பட்டினம்,மே 10:**

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் அருகேயுள்ள கிராமம் ஏம்பவயல் மற்றும் அய்யம்பட்டினம் கிராமம் இந்த பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு இப்பகுதியில் சுடுகாடு உள்ளது இந்நிலையில் அந்த சுடுகாட்டுக்கு செல்லும் பாதையை தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்வதாக கூறி அப்பகுதியை சேர்ந்த மக்கள் கிழக்கு கடற்கரை சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் இதுகுறித்து காவல்துறை மற்றும் வருவாய் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் மற்றும் வருவாய்த்துறையினர் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் பேச்சுவார்த்தை வெகுநேரமாகியும் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை இதனால் கிழக்கு கடற்கரை சாலையில் சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர் அப்பொழுது இது சம்பந்தமாக அதிகாரிகள் கலந்து ஆலோசித்து விரைவாக தீர்வினை ஏற்படுத்துவார்கள் என்று உறுதி அளித்ததன் பேரில் சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,877 | Rs.5,276 |





1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

## இந்திய ரெட்கிராஸ் சங்க புதுக்கோட்டை கிளையின் சார்பாக உலக ரெட்கிராஸ் தின கொண்டாட்டம்

புதுக்கோட்டை மே.10-

ரெட்கிராஸ் சங்கத்தைத் தோற்றுவித்த, சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜீன் ஹென்றிடூனாண்ட் பிறந்த நாளான மே. 08 -ஆம் நாளை உலகெங்கும் "உலக ரெட்கிராஸ் தினமாக" கொண்டாடுகிறார்கள். இந்த தினத்தை நேற்று இந்திய ரெட்கிராஸ் சங்க புதுக்கோட்டை கிளையின் சார்பாக, புதுக்கோட்டை மாவட்டம், காயாம்பட்டி ஊராட்சி மாங்கனாம்பட்டி கிராமத்தில், 40 பெண்மணிகளுக்குநிவாரண பொருள்கள் வழங்கிக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்குகாயாம்பட்டி ஊராட்சித் தலைவர் கே.ஆர்.செல்வி ராம்தாஸ் தலைமை வகித்தார். புதுக்கோட்டை மாவட்ட ரெட்கிராஸ் சங்க கௌரவச் செயலாளர்



ஜெ.ராஜாமுகமது, இணைச் செயலாளர் பேரா.சா.விஸ்வநாதன் இருவரும் ரெட்கிராஸ் ஆற்றும் சமூகப் பணிகளை எடுத்துரைத்தனர்.

மாஞ்சான் விடுதி ஊராட்சிமன்றத்தலைவர் வே.சுரேஷ்கண்ணன், கொத்தக் கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் மாரிக்கண்ணு மயிலன், வாராப்பூர் ஊராட்சிமன்றத்தலைவர் சதிஸ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர் இப்பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 40 ஏழை பெண்மணிகளுக்கு நிவாரணப் பொருட்கள் (தார்ப்பாய், கொசுவலை, வேட்டி, சோப்பு மற்றும் தூய்மைப் பொருட்கள் அடங்கிய பை, முகக்கவசங்கள்) வழங்கப்பட்டது. நிறைவாக நிகழ்வை ஏற்பாடு செய்த, சமூக சேவகர் வம்பன் சிவக்குமார் நன்றி கூறினார்.

## தெலங்கானாவில் வேன் மீது லாரி மோதிய கோர விபத்தில் 6 பெண்கள் உட்பட 8 பேர் பலி

தெலங்கானா மே.10-

தவறான திசையில் வந்த லாரி ஒன்று, வேன் மீது மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பெண்கள் உட்பட 8 பேர் பரிதாபமாகஉயிரிழந்தனர்.

தெலங்கானா மாநிலம், காமரெட்டி மாவட்டம், பிட்லம் பகுதியில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக எல்லாரெட்டியில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 30 பேர் மினி வேனில் சென்றுக் கொண்டிருந்தனர். ஒருவழிநெடுஞ்சாலையில் வேன் சென்றுக் கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாகஅதன் எதிரே தவறான திசையில் லாரி அதிவேகத்தில்



வந்தது. இதனால் அடுத்து என்ன செய்வது என வேன் டிரைவர் சுதாரிப்பதற்குள்ளாக அவர்களின் வாகனம் மீது லாரி மோதியது.

இந்த கோர விபத்தில் வேன் அப்பளம் போல நொறுங்கி சம்பவ இடத்திலேயே 3 பெண்கள் உயிரிழந்தனர். விபத்தை நேரில் பார்த்த பொதுமக்கள்,காயமடைந்த அனைவரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும், சிகிச்சை பலனின்றி மேலும் 3 பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 8-ஆக உயர்ந்தது. 20-க்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.








புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கொத்தமங்கலம் சிதம்பர விடுதி, சோகரன் குடியிருப்பு, கோனன் குடியிருப்பு, மோகன் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 50-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு குடிநீர் பற்றாக்குறையை போக்கிட ஏழு மாதங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட குடிநீர் தொட்டி தண்ணீரின்றி காணப்படுகின்றது. இந்நிலையை போக்கி, இப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு இன்றி தண்ணீர் கிடைத்திட நடவடிக்கை எடுக்க சிதம்பர விடுதி வீர செங்குட்டுவன் மற்றும் இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.



சென்னை மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அஞ்சு ரூபாய்டாக்டர் ஜெயச்சந்திரன் பெயர் சூட்ட கையெழுத்து இயக்கம் நேற்று அதிகாலை சென்னை ராயபுரம் அறிஞர் அண்ணா பூங்காவில் தொடங்கியது.

## திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடல் உறுப்புகள் தானம்

திருச்சி மே.10-

திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டது.

மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டது குறித்து மருத்துவமனை முதல்வர் மருத்துவர். வனிதா கூறுகையில்,

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருகில் இருக்கும் கொடும்பாளூரைச் சேர்ந்த 27 வயது வாலிபர் மே.01 அன்று சரக்கு ஆட்டோ ஓட்டிச் சென்றபோது விபத்து ஏற்பட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் திருச்சி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மே.06 அன்று திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு மே.08 அன்று மூளைச்சாவு அடைந்தார். மூளைச்சாவு அடைந்ததை மூளை நரம்பியல் மருத்துவர் ராஜசேகர் மற்றும் மூளை நரம்பு அறுவை சிகிச்சை மருத்துவர் முத்துராமன் ஆகியோர் உறுதி செய்தனர். உடல் உறுப்பு தான ஒருங்கிணைப்பாளர் பிரசன்னா மூளைச்சாவு அடைந்தவரின் குடும்பத்தாரிடம் உடல் உறுப்பு தானம் குறித்து



விளக்கிக் கூறி ஒப்புதல் பெற்றார்.

இதனையடுத்து, மயக்கவியல் துறைத்தலைவர் மருத்துவர் சிவக்குமார், மருத்துவர் இளங்கோ ஆகியோரின்துணையுடன் சிறுநீரக அறுவை சிகிச்சை மருத்துவர் பிரபாகரன், மருத்துவர் ரவி , சிறுநீரக மருத்துவத் துறை தலைவர் பாலமுருகன், சிறுநீரக மருத்துவர் மைவிழி, செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் ஆகியோர் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடலிலிருந்து இரண்டு சிறுநீரகங்கள், கல்லீரல் மற்றும் இரண்டு கண்களை அறுவை சிகிச்சை மூலம் நேற்று முந்தின இரவு அகற்றினர். பின்னர் மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் E.அருண் ராஜ் நிலையமருத்துவ அலுவலர் சித்ரா திருவள்ளுவன் ஆகியோரின் மேற்பார்வையில் கல்லீரல் உறுப்பு கோயம்புத்தூர் மருத்துவமனைக்கும் ஒரு சிறுநீரகம் திருநெல்வேலிக்கும் ஒரு சிறுநீரகம் மற்றும் இரு கண்கள் திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டது.

திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் 7.7.2021 அன்று முதல் முறையாகவும் 7.4.2022 அன்று இரண்டாவது முறையாகவும் நேற்று மூன்றாவது முறையாக மூளைச்சாவு அடைந்தவரின் உடல் உறுப்புகளை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மரியாதையுடன் அவரது குடும்பத்தாரிடம் நேற்று காலை 10.30 மணிக்கு கொடுக்கப்பட்டது. மேலும் மூளைச்சாவு அடைந்தவரின் உடலிலிருந்து தானமாக பெறப்படும் உறுப்புகள் மூலம் பலருக்கு மறுவாழ்வு அளிக்க முடியும். எனவே பொதுமக்கள் உடல் உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு பெற்று அதனை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு முன்வர வேண்டும் என்றார்.

## எலி பேஸ்ட் சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர்களால் உயிர் பிழைத்தனர்

புதுக்கோட்டை மே.10-

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எலி பேஸ்ட் மருந்து உட்கொண்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப் பட்டிருந்த இருவர் உயர்தர சிகிச்சைக்குப் பின் உடல் நலம் தேறி நல்ல முறையில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டனர்



தமிழகத்தில் கடந்த சில வருடங்களாக எலிக்கொல்லி பசை உட்கொள்வதால் உயிரிழப்புகள் மற்றும் கல்லீரல்பாதிப்பு அதிகரித்த வண்ணம் உள்ளன.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு முறையாக சிகிச்சைஅளித்துஉயிரிழப்பு மற்றும் பாதிப்புகளைத் தடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மையமாகக் கொண்டு தமிழக அரசால் புதிய திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தபட்டிருக்கிறது. இதன்படி இந்த கொடிய விஷத்தை உட்கொண்டவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் ஆரம்ப கட்ட சிகிச்சை அளித்து, கொடிய தாக்கம் ஏற்பட்டவர்களைக் கண்டறிந்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர் . இங்கு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குஇணங்க பாதிக்கப்பட்டவர்களுக்கு நவீன முறையில் பிளாஸ்மா மாற்று சிகிச்சை செய்யப்படுகின்றது. இதனால் உயிரிழப்பு பெருமளவு தடுக்கப் படுகின்றது.

பெருநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்பட்டுவந்த இந்தநவீன சிகிச்சையானது தற்பொழுது தமிழகம் முழுவதும்உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அரசு மருத்துவமனைகளில் செய்யப்படுகின்றது. தனியார் மருத்துவமனையில் பெரும் பொருட்செலவு ஆகக்கூடிய இந்த சிகிச்சை அரசுமருத்துவமனைகளில் மாண்புமிகுதமிழகமுதல்வர் அவர்களின் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவமனை முதல்வர் பூவதி தலைமையில் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டு இந்நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதன் படி சமீபத்தில் நமது மாவட்டத்தில் எலிக்கொல்லி பசை உட்கொண்டு மிகவும் பாதிப்புடன் அனுமதிக்கப்பட்ட கனகவேல் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) மற்றும் ஈஸ்வரி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) ஆகியோருக்கு நவீன பிளாஸ்மா மாற்று சிகிச்சை செய்து அவர்கள் உயிர் மற்றும் உடல் நலன் காப்பாற்றப்பட்டுள்ளது. இவர்களுக்குரியஇந்தநவீன சிகிச்சை முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தில் முற்றிலும் இலவசமாக செய்யப்பட்டது.

சிகிச்சை மேற்கொண்ட மருத்துவக் குழுவினரை மருத்துவமனை முதல்வர் பாராட்டினார். நோயாளிகளுக்கும் அறிவுரை வழங்கினார். இந்த கொடிய விஷத்தை உட்கொண்டவர்கள்சற்றும் தாமதிக்காமல்உடனடியாக மருத்துவமனையை நாடினால் உரிய சிகிச்சை உடனே துவங்கப்பெற்று நோயாளியை காப்பாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்கத்தில் மருத்துவமனைகளுக்கு பதிவுச் சான்று வழங்கும் விழா

புதுக்கோட்டை மே.10-

புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்க கூட்ட அரங்கில் மருத்துவமனைகளுக்கு பதிவு சான்று வழங்கும் விழா மற்றும் தொடர் மருத்துவக் கல்வி நடைபெற்றது.

புதுக்கோட்டை இந்தியமருத்துவசங்கத்தில் மருத்துவமனைகளுக்கு பதிவுச் சான்று வழங்கும் விழா மற்றும் தொடர் மருத்துவக் கல்வி நடைபெற்றது. கிளைத் தலைவர் மருத்துவர் சுவாமிநாதன் தலைமை வகித்தார் , கிளைச் செயலாளர் மருத்துவர் முகம்மது சுல்தான் வரவேற்புரை ஆற்றினார்.



சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை மாவட்ட இணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் மருத்துவர் ராமு கலந்து கொண்டு சிறிய மற்றும் பெரிய மருத்துவமனை, செயற்கை கருத்தரிப்பு மையம் ஆகியவற்றுக்கு சான்றிதழ்களை வழங்கி பேசினார். அவர் பேசுகையில், உடல் உறுப்பு தானம் மற்றும் கண் தானம் முக்கியத்துவத்தையும் மக்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

தொடர்ந்து கிளை மருத்துவ உறுப்பினர்களுக்கு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை விபத்து மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவ நிபுணர் சரவணவேல் விபத்து மற்றும் வெப்ப காலங்களில் உடலில் குறையும் நீர் மற்றும் உப்புக்களை கண்டறிந்து அதற்கான தற்காலத்தில் உள்ள நவீன சிகிச்சையை திரை மூலம் விளக்கமளித்தார். இதேபோல் நோய் எதிர்ப்புசக்தி மற்றும்வாத நோய் சிறப்பு மருத்துவ நிபுணர் கார்த்திகேயன் ஆரம்ப நிலையில் வாதங்களை கண்டறியும் முறையையும் அதற்குண்டான தற்கால சிகிச்சை முறையையும் விளக்கமளித்தார்.

புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்க கிளை முன்னாள் நிர்வாகிகள், மூத்த மருத்துவர்கள் கலந்து கொண்டனர். நிதிச் செயலாளர் மருத்துவர் கோபாலகிருஷ்ணன் நன்றியுரை ஆற்றினார்.

# பெரம்பூர் பாஞ்சாலி நகர் கிளையின் கட்டிடத் தொழிலாளர்களின் கட்சிக் கொடியை ஏற்றி வைத்து பெயர் பலகை திறப்பு விழா: பொன்குமார் பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, மே10–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரம்பூர் பாஞ்சாலி நகர் கிளையின் சார்பில் தமிழக கட்டிட தொழிலாளர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் கட்சி கொடியை ஏற்றி வைத்து,பெயர் பலகை திறப்பு விழா பெரம்பூர் பஸ் நிறுத்தம் அருகே நேற்று மாலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பெரம்பூர் பாஞ்சாலி நகர் கிளை தலைவர் வடிவேலு தலைமை தாங்கினார். முருகன், மதனகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விஜயகுமார், சண்முகம், வெங்கடேசன், முருகன், பொம்மி, மணிமேகலை, ஜெயந்தி,தேவி, குணசுந்தரி ஆகியோர் அனைவரும் வரவேற்றனர்.

இதில்,கிழக்கு மாவட்ட தலைவர் வரதன்,மாவட்ட செயலாளர் செல்வராஜ், பொருளாளர் குமரேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு அழைப்பாளர்களாக எல்லாபுரம் ஒன்றிய திமுக செயலாளரும்,தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பி.ஜே. மூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ராமமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், சிறப்பு விருந்தினராக கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் தமிழகத் தலைவர் பொன்குமார் கலந்துகொண்டு கட்சி கொடியை ஏற்றி வைத்து பெயர் பலகை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழக கட்டிட தொழிலாளர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பெரம்பூர் பாஞ்சாலி நகர் கிளை நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் சோழவரம் ஒன்றியம் ஒரக்காடு கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு அலமேல் மங்கை சமேத ஸ்ரீ சீனிவாச பெருமாள் திருக்கோவிலில் கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு சிறப்பு யாகசாலை பூஜை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கோவில் கோபுரத்தில் கலச நீரால் அபிஷேகம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது . இதில் பரம்பரை ஆலய தர்மகர்த்தா ஆர். வெங்கடேஸ்வரலு நாயுடு, மற்றும் ஆலய ஸ்தபதி பெருமுடிவாக்கம் பூமால் ,ஆலய அர்ச்சக ஸ்தானிகர் ஏபி .வீரராகவஜயங்கார் (எ) மணி, சர்வ சாதகர் ஆதி.ஏ.வி. ஆனந்தன் சாமிகள், ஒரக்காடு ஊராட்சி சுற்றியுள்ள கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# செங்காடு ஊராட்சியில் சிறப்பு கிராம சபைக் கூட்டம்



காஞ்சிபுரம் .மே .10:

காஞ்சிபுரம்மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், செங்காடு ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சென்சுராணி கவாஸ்கர் தலைமையில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு துணை தலைவர் டி .சுதாகர் முன்னிலை வகித்தார் . இக்கூட்டத்தில் 2021-2022 -ம் ஆண்டு பொது செலவினம் ,திடக்கழிவு மேலாண்மை ,15-வது நிதிக்குழு மானிய திட்ட பணிகள், அனைத்து அண்ணா மறுமலர்ச்சி திட்டம்,மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் குறித்தும் , பிளாஸ்டிக் அற்ற ஊராட்சி உருவாக்குதல்,தூய்மை பாரத இயக்கம் ,நமக்கு நாமே திட்டம் ஆகியவை குறித்துவிவாதிக்கப்பட்டது. மேலும் கூட்டத்தில் அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர் வசதி உள்ளிட்ட செய்து தருவது, பொதுமக்கள் முன் வைத்த கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவது .

ஊராட்சியில் பல்வேறு புதிய வளர்ச்சி திட்டங்கள், நிறைவடைந்த திட்டங்கள் ஆகியன குறித்தும் ஆலோசிக்கப்பட்டு பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர் சரண்யா ,பள்ளி தலைமை ஆசிரியர் ரவி,வார்டு உறுப்பினர்கள் ஹேமாவதி,மணிகண்டன் ,லாவண்யா தாமோதரன் ,கோமதி ராஜசேகர் ,ரேகா செந்தில்குமார் ,கிராம செவிலியர்கள் மற்றும் வள்ளி, ஜெர்ரி உட்பட 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர் .முடிவில் ஊராட்சி எழுத்தர் மகேந்திரன் நன்றி கூறினார்.

# மயிலாடுதுறையில் தனது வீட்டை மீட்டு தருமாறு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 78 வயதில் அலைந்து திரியும் மூதாட்டி



மயிலாடுதுறை , மே10–

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா வில்லியனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தம்மாள். 78 வயதான இந்த மூதாட்டியின் வீட்டை அக்கம்பக்கத்தில் உள்ள சிலர் அபகரித்ததாக புகார் எழுந்துள்ளது.

இவரது கணவர் மற்றும் மகன் இறந்துவிட இவரது ஒரே மகள் திருமணமாகி கும்பகோணம் அருகே வசித்து வருகிறார். இவரது கணவர் பெயரிலான சுமார் 1200 சதுர அடியில் சிறிய கூரை வீட்டில் வசித்துவந்த இடத்தை அருகில் உள்ள சிலர் விலைக்கு வாங்கி விட்டதாக கூறியுள்ளனர். இவர் வீட்டில் தங்க முடியாத நிலையில் இவரது மகளும் உதவிக்கு வரவில்லை. முதுமை காரணமாக நடக்க முடியாத நிலையில் கால்கள் ஒடிந்து அதற்கு வைத்தியம் பார்த்து, நாற்காலி போன்ற ஊன்றுகோல் உதவியுடன் தட்டுத்தடுமாறி வாரம்தோறும் திங்கட்கிழமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் மனு கொடுத்து வருகிறார். அவரை தாலுகா அலுவலகம் சென்று பார்க்கும்படி அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர்.

இவரது சொந்த தாலுகாவான குத்தாலத்திற்கு சென்று மனு செய்தால் காவல் நிலையத்திற்கு விரட்டுகின்றனர். காவல் நிலையத்திலிருந்து தாலுகா அலுவலகம் செல்ல சொல்கின்றனர். மேலும் சில காவலர்கள் முதியோர் இல்லத்தில் போய் சேரும் படி பதில் சொல்வதாக கண்ணீர் மல்க மூதாட்டி தெரிவிக்கிறார். அவரும் விவரம் புரியாமல் 50க்கும் மேற்பட்ட தடவை தாலுகா அலுவலகம் காவல் நிலையம் என்று மாறி மாறி சென்று வருகிறார்.

சிலசமயம் வயது முதிர்ச்சியின் காரணமாக குத்தாலம் தாலுகா அலுவலகத்திற்கு பதில் மயிலாடுதுறை தாலுகா அலுவலகத்திற்கு சென்று மனு அளிக்கிறார். தொடர்ந்து அதிகாரிகளால் அலைகழிக்கப்படும் நிலையில் இன்னும் எத்தனை காலத்திற்கு நான் உயிர் வாழ போகிறேன் வாழும் வரை எனது கணவர் வாழ்ந்த வீட்டில் இருக்க விடுங்கள் என்று கண்ணீருடன் மூதாட்டி கதறுகிறார். முதியோர் பராமரிப்பு சட்டத்தின்கீழ் அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



ஆவடியில் சேப்பா அறக்கட்டளை சார்பில் நம்ம ஆவடி மாரத்தான் ஓட்டப் போட்டி மாஸ்டர் ஆர். சங்கீதா தலைமையில் நடைபெற்றது. இதில் மாஸ்டர் எஸ். ராஜா முன்னிலை வகித்தார். இப்போட்டியில் தமிழகத்திலிருந்து சுமார் 300 க்கும் மேற்பட்ட மாரத்தான் ஓட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். பின்னர் இப்போட்டி ஆவடியில் இருந்து சுமார் 5 கிலோமீட்டர் தூரம் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியத்தில் உள்ள வெள்ளானூர் ஊராட்சி அரசு நடுநிலைப்பள்ளி வரை சென்றடைந்தனர் இதனை தொடர்ந்து பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக அதிமுக முன்னாள் அமைச்சர் ஆவடி அப்துல் ரஹீம் திரைப்பட நடிகை காயத்ரி ரகுராம் அர்ச்சனா ஐ எப் எஸ், கமான்டென் சி ஆர் சி எப். அரசு அதிகாரி ராமசாமி ஆகியோர் கலந்துகொண்டு மாரத்தான் ஓட்டத்தில் முதலிடம் ரூபாய் 5 ஆயிரம், இரண்டாமிடம் ரூபாய் 4 ஆயிரம் மூன்றாமிடம் ரூபாய் 3...ஆயிரம் மற்றும் கோப்பை சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். இதில் சமூக ஆர்வலர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்

# குத்தாலம் உத்தவேதீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகத்தில் ஆதீனங்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்





குத்தாலம்,மே.10:

மயிலாடுதுறை மாவட்டம்,குத்தாலத்தில் தருமை ஆதீனத்திற்கு சொந்தமான பரிமளசுகந்தநாயகி உடனாகிய உக்தவேதீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. திருத்துருத்திஎன்று அழைக்கப்படும் இக்கோவிலில் சுவாமி மணவாளநாதர் திருக்கோலத்துடன் அருள்பாலிக்கிறார். தேவாரப்பாடல் பெற்ற இத்தலத்தில் பார்வதிதேவியை மணம் முடிக்க சிவபெருமான் கைலாயத்தில் இருந்து வந்த போது அவருக்கு துணையாக வந்த உத்தால மரமும், சிவபெருமானின் பாதரட்ஷையும் இன்றும் இக்கோயிலில் உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க கோவிலில் கும்பாபிஷேகம் நேற்று காலை நடைபெற்றது கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 4-ஆம் தேதி யாகசாலை பூஜைகள் தொடங்கப்பட்டன. தொடர்ந்து நேற்று காலை எட்டாம் கால யாகசாலை பூஜைகள் முடிவுற்று பூர்ணாஹுதி மற்றும் தீபாரதனை நடைபெற்றது. அதனையடுத்து யாகசாலையில் இருந்து கடங்கள் புறப்பாடு செய்யப்பட்டு கோவிலை வளம் வந்து விமான கலசத்தை அடைந்தன தொடர்ந்து தருமபுரம் ஆதீன 27-வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் 24-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், செங்கோல் ஆதீனம் 103-வது குருமகா சன்னிதானம் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாச்சாரிய சுவாமிகள், தொண்டைமண்டலம் 233-வது சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருப்பணி செம்மல் சென்னை மகாலட்சுமி ஆகியோர் முன்னிலையில் சுவாமி சன்னதி விமானக் கலசத்திற்கு திருக்கடையூர் மகேஷ் குருக்கள் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஏககாலத்தில் சுவாமி நடராஜர் ராஜகோபுரம் உள்ளிட்ட அனைத்து கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து சுவாமி அம்பாள் நடராஜருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் 20-ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்தை யொட்டி மயிலாடுதுறை டிஎஸ்பி வசந்தராஜ் தலைமையில், குத்தாலம் இன்ஸ்பெக்டர் வள்ளி உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# தச்சூர்–சித்தூர் ஆறு வழி சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும்

## விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் சண்முகம் அறிவிப்பு



ஊத்துக்கோட்டை, மே10–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,தச்சூர் முதல் ஆந்திர மாநிலம் சித்தூர் வரையில் 136 கிலோமீட்டர் தூரத்துக்கு ஆறு வழிச்சாலை ரூ.3,800 கோடி செலவில் அமைக்க தேசிய நெடுஞ்சாலை துறை ஆணையம் முடிவு செய்தது. அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், இந்த ஆறு வழி சாலைக்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த சாலையை மாற்றுப்பாதையில் அமைக்குமாறு விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இருப்பினும், சாலை அமைக்கும் பணியை அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். எனவே,நிலம் கையகப்படுத்தும் கருத்துக்கேட்பு கூட்டத்தில் விவசாயிகள் தொடர்ந்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இருப்பினும், பெரும் முதலாளிகளின் லாப நோக்கத்திற்காக இந்த சாலை அமைக்கப்படுவதால் மூன்று போகம் விளையும் நிலங்களை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று விவசாயிகள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், சாலை அமைக்கும் பணியால் பாதிக்கப்படும் விவசாயிகளின் சார்பாக நேற்று முன்தினம் மாலை ஊத்துக்கோட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நிலப்பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது.இம் மாநாட்டுக்கு, விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சம்பத் தலைமை தாங்கினார். கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சி.பெருமாள் அனைவரையும் வரவேற்றார். மாநில பொருளாளர் கே.பி. பெருமாள் மாநாட்டு துவக்க உரையாற்றினார்.

இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சண்முகம் கலந்து கொண்டு 700 ஏக்கர் விளைநிலம் பாதிக்கப்படுவதாகவும், ஆயிரம் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறும் என்றும் எடுத்துக்கூறினார். மேலும்,இத்திட்டத்தை மாற்றுப்பாதையில் அமைக்க கோரியும் தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் ஆறு வழிச்சாலை திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளின் வீடுகளில் இம்மாதம் 31-ம் தேதி செவ்வாய்க்கிழமை கருப்புக்கொடி ஏற்றி வைத்து தங்களது எதிர்ப்பை மத்திய,மாநில அரசுகளுக்கு தெரிவிப்பது என்றும் இதில் தீர்வு கிடைக்கவில்லை எனில் அடுத்த கட்ட போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் கூறினார்.

இந்த மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயலாளர் சிதம்பரம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் துளசிநாராயணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் கோபி நயினார்,கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் கோபால்,மதிமுக மாவட்ட பொருளாளர் பாபு, ஒன்றிய கவுன்சிலர் ரவி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த காங்கை குமார்,வெங்கல் சிவசங்கர்,காக்கவாக்கம் சசிகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முடிவில், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனி நன்றி கூறினார்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தாட்கோ திட்டத்தின் வாயிலாக சங்கீதா ரோஜா மகளிர் சுய உதவிக்குழு பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்தில் வங்கி கடனுதவி, ரூ.2.5இலட்சம் தாட்கோ மானியத்திற்கான ஆணைகளை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா வழங்கியபோது எடுத்தப்படம்.

Cell: 8870570628
MCM
ஸ்வீட்ஸ் & பேக்கரி
கிளைகள் : மெயின் ரோடு & பேருந்து நிலையம் எதிரில்...



திருவள்ளூர் மாவட்டம் புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் திமுக முன்னாள் மாவட்ட பிரதிநிதி முன்னாள் புழல் ஒன்றிய இணைச் செயலாளர் காலஞ்சென்ற ஜி. பெருமாள் மனைவி மற்றும் விளாங்காடுபாக்கம் ஊராட்சி திமுக செயலாளர் பெ.சரவணன் தாயார் பெ.மகாதேவி முதலாம் ஆண்டு நினைவஞ்சலி திருஉருவ படம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ச.பாரதி சரவணன், திரைப்பட கானா பாடகர் பாலா ஆகியோர் தலைமையில் படத்தை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகள் புடவை வேட்டி சேலைகள் என 600-க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு மாற்றுத்திறனாளிக்கு திருநங்கைகளுக்கு வழங்கினார். இதில் தக்ஷிணாமூர்த்தி, செல்வகுமார், கௌதமன், பரிமளச் செல்வம், உதயகுமார், எழிலன், கபிலன், விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திமுக கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர். இந்த நிகழ்வின் முடிவில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

பொது அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், எமது கட்சிக்காரர் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகா, மீமிசல் அஞ்சல், ஆலத்தூர் தெற்கு கிராமத்தில் வசித்து வரும் வேலுத்தேவர் மகன் மதிவாணன் என்பவர் மூர்த்தி என்பவரிடம் கிரையம் பெற்ற சொத்தின் மூலப்பத்திரம் மீமிசல் சார்பதிவக ஆவண எண்: 60/2000 என்ற அசல் ஆவணத்தினை கடந்த 05.05.2022-ம் தேதியன்று ஆலத்தூர் அவரது வீட்டிலிருந்து மீமிசல் கடைவீதிக்கு உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுப்பதற்காக தனது இருசக்கர வாகனத்தில் சென்றபோது மூலப்பத்திரம் பையுடன் காணாமல் போய்விட்டது. இது சம்பந்தமாக புதுக்கோட்டை-Webcell-க்கு Online மூலமாக 07.05.2022-ல் CAM22077934- புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் பாத்திரத்தினை எவரேனும் எடுத்திருந்தால் அதனை என் வசமோ அல்லது என் கட்சிக்காரர் வசமோ ஒப்படைக்க வேண்டியது அறியவும்.

எம்.ராஜேந்திரன் அட்வகேட் & நோட்டரிபப்ளிக் அறந்தாங்கி

# இரண்டு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உப்பளத் தொழிலாளர்கள் கிழக்கு கடற்கரை சாலையில் சாலை மறியல்



செங்கல்பட்டு , மே10–

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் சூனாம்பேடு அருகே பத்மா கெமிக்கல் உப்பளத் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இங்குபணிபுரியும்ஒப்பந்த தொழிலாளர்களுக்கு தமிழக அரசு ஆணைப்படி குறைந்தபட்ச கூலியை வழங்கிட வேண்டும், நிர்வாகத்தில் இருக்கும் போலியாக ஒப்பந்ததாரர்கள் குண்டர்களை வெளியேற்றிவிட்டு அரசு ஆணைப்படி உப்பளத் தொழிலாளர்கள் நேரடியாக பணி வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உப்பளத் தொழிலாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கிழக்குக் கடற்கரைச் சாலை வெண்ணங்குபட்டு பகுதியில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து அங்கு விரைந்து வந்த சூனாம்பேடு போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களை சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். இந்த சாலை மறியலால் அப்பகுதியில் சில மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# குத்தாலம் ஓஎன்ஜிசி அலுவலகம் முன்பு கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்



நாகப்பட்டினம்,மே.10–

நாகை மாவட்டம் திட்டச்சேரி அருகே குத்தாலத்தில் அமைந்துள்ள மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ஒ.என்.ஜி.சி நுழைவு வாயில் முன்பு குத்தாலம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் குத்தாலம் பகுதியில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ஒ.என்.ஜி.சி நிறுவனத்தின் மாசு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு ராமநாதபுரம், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, கொளப்பாடு, கமலாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கடல் நீரை விட 10 மடங்கு உவர்ப்பு தன்மை கொண்ட கெட்ட உப்பு நீர் டேங்கர் லாரிகள் மூலம் கொண்டுவரப்படுகிறது.

கொண்டுவரப்படும் கெட்ட உப்பு நீர் 1800 மீட்டர் அளவில் ராட்சத போர்வெல் மூலம் பூமிக்கடியில் செலுத்தப்படுகிறது. இதனால், கோபுராஜபுரம், நரிமணம், குத்தாலம், திட்டச்சேரி, எராவாஞ்சேரி உள்ளிட்ட கிராமங்களில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாரியிருப்பதாக புகார் எழுந்துள்ளது. இந்த நிலையில், நிலத்தடி நீரை மாசுபடுத்தும் ஒ.என்.ஜி.சி மாசு நீர் சுத்திகரிப்பு நிலையம் முன்பு குத்தாலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சேகர் தலைமையில் கிராம மக்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது மாசு நீர் சுத்திகரிப்பு நிலைத்தை அகற்ற வேண்டும் என்றும்,தூய்மையான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,புதிய போர்வெல் அமைக்கக்கூடாது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஒ.என்.ஜி.சி நிறுவனம் மற்றும் மத்திய அரசிற்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். இதனால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# திறமை மிக்க மாணவர்களை உருவாக்க வேண்டும்–அழகப்பா பல்கலை பதிவாளர் சேகர்



கோட்டையூர் மே.10–

கோட்டையூர் கவி கல்வியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் அழகப்பா பல்கலை கழகத்தின் பதிவாளர் சேகர்பட்டங்களைவழங்கி பேருரையாற்றினார்

கோட்டையூர் கவி கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் சேர்மன் கவிஞர் ஆர்.எம். கதிரேசன் தலைமை தாங்கினார். கல்லூரியின் முதல்வர் கந்தசாமி வரவேற்புரையாற்றி ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக அழகப்பா பல்கலை கழகத்தின் பதிவாளர் சேகர் கலந்து கொண்டு 130 மாணவ மாணவியர்களுக்கு பி.எட் பட்டங்களை வழங்கி பேசினார்.

அவர் பேசுகையில், மாணவர்களின் உணவு முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் ஆசிரியர்கள் மாணவர்களின் மனநிலையை அறிந்து கொண்டு எவ்வாறு அவர்களுக்கு பாடத்தை கற்பிக்க வேண்டும் நல்ல அனுபவத்தை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்று கொடுக்க வேண்டும். உடல் பலம், மனபலம், மனஎழுச்சி பலம் , சமுதாய பலம், போன்ற திறன்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வளர்த்துவிட வேண்டும். மாணவர்களை தன்னம்பிக்கை உடையவர்களாக மாற்ற வேண்டும். மாணவர்களை சரிசெய்து அதன் மூலம் சமுதாய மாற்றத்தினை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும். அறிவை நிரப்புபவரே ஆசிரியர்.

மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேள்வி கேட்டு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு சமூகம் வளர வேண்டுமானால் மிகச் சிறந்த கருவியாக இருப்பது கல்வி மட்டுமே. ஒவ்வொருவரிடமும் அன்பும் தனிச்சிறப்பும் உள்ளது. அதனை ஆசிரியர்கள் வெளிக்கொணரவேண்டும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மிகச் சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும். தற்போது அறிவியல் மிகச் சிறந்த முறையில் முன்னேறியுள்ளது.

மாணவர்கள் அனைவரும் அதற்கு ஏற்றார்போல் தங்களது வளர்ச்சியினை மேம்படுத்திவாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்றும் கூறினார் . துறை விரிவுரையாளர்கள் அந்தந்த துறை மாணவர்களை அறிமுகம் செய்தனர். விழாவில் பேராசிரியர்கள் செல்லப்பா, சாந்தாராம், சின்னையா மற்றும் மாணவ மாணவியர், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியர் உமா நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# தென்னிந்திய அளவிலான கபாடி போட்டியில் பெண்கள் பிரிவில் தமிழக அணி முதலிடம்



நெல்லை மே.10–

தென்னிந்திய அளவில் நடைபெற்ற கபாடி போட்டியில் ஆண்கள் பிரிவில் கர்நாடகா அணியும், பெண்கள் பிரிவில் தமிழக அணியும் முதலிடம் பிடித்தன.

நெல்லை மாவட்டம், கூடங்குளம் அருகே செட்டிகுளத்தில் தென் இந்திய அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபாடி போட்டிகள் நடைபெற்றது. ஆண்கள் பிரிவில் ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இருந்து 16 அணிகள் கலந்து கொண்டன. பெண்கள் பிரிவில் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு, கேரளாமாநிலங்களிலிருந்து 13 அணிகள் கலந்து கொண்டன.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவுஇறுதிப்போட்டியில் ஹைதராபாத் ஆர்மி அணியும் கர்நாடகா பேங்க் ஆப் பரோடா அணியும்மோதின. இதில் பாங்க் ஆப் பரோடா அணி 24:11 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் பெங்களூரு அணியும், தமிழகத்தை சேர்ந்த ஒட்டன்சத்திரம் அணியும் மோதியது. இதில் ஒட்டன்சத்திரம் அணி 41:35 என்ற புள்ளி கணக்கில் பெங்களூர் அணியை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.

ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்ற பேங்க் ஆப் பரோடா அணிக்கு முதல் பரிசாக கோப்பையுடன் 1 லட்சம் ரூபாயும், இரண்டாமிடம் பிடித்த ஹைதராபாத் அணிக்கு கோப்பையுடன் 50 ஆயிரம் ரூபாயும் பரிசாக வழங்கப்பட்டது. சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கு சிறப்பு பரிசும் வழங்கப்பட்டன.

அதேபோல்பெண்கள் பிரிவில் முதலிடம் பிடித்த ஒட்டன்சத்திரம் அணிக்குகோப்பையுடன் 50 ஆயிரம் ரூபாயும், இரண்டாமிடம் பிடித்த கர்நாடகா அணிக்குரூபாய் 25ஆயிரமும் கோப்பையும் வழங்கப்பட்டது. சிறப்பாக விளையாடிய வீராங்கனைகளுக்குசிறப்பு பரிசும் வழங்கப்பட்டது.

# ஆர்.ஏ.புரம் ஆக்கிரமிப்பு அகற்றம் மயிலாப்பூர், மந்தைவெளியில் மாற்று வீடுகள் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை , மே.10–

இனிவரும்காலங்களில், ஆக்கிரமிப்புகளை அகற்றும் முன், மறுகுடியமர்வு பகுதி குறித்து மக்களின் கருத்துகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்படும்–முதல்வர் மு.க.ஸ்டாலின்

ஆர்.ஏ. புரத்தில் ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றப்பட்டு அங்குள்ள மக்களுக்கு தொலைவில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்த நிலையில், அப்பகுதி மக்கள் மந்தைவெளி, மயிலாப்பூரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டி வரும் வீடுகளில் மறுகுடியேற்றம் செய்யப்படுவார்கள் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆர்.ஏ.புரம் கோவிந்த சாமி நகர் இளங்கோ தெரு பகுதியில் பக்கிங்காம் கால்வாய் நீர்நிலையை ஆக்கிரமித்து, பல பத்தாண்டுகளாக 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர், வீடு கட்டி வசித்து வந்துள்ளனர். இதில், ஆயிரக்கணக்கான மக்கள் வசித்து வருவதாக கூறப்படுகிறது. இது தொடர்பான வழக்கில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீடுகளை இடிக்கும் பணியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீக்குளித்த முதியவர் கண்ணையன் என்பவர் உயிரிழந்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இங்கிருந்து வெளியேற்றப்படும் தங்களுக்கு 40கிலோமீட்டர் தொலைவில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மயிலாப்பூரில் விரும்பத்தகாத நிகழ்வு நடந்துள்ளது. வரும் காலங்களில் குடியிருப்பு அகற்றும் போது மாற்று இடம் வழங்குவது குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கப்படும்.

இனிவரும்காலங்களில், ஆக்கிரமிப்புகளை அகற்றும் முன், மறுகுடியமர்வு பகுதி குறித்து மக்களின் கருத்துகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்படும். ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து மறுகுடியமர்வு கொள்கை விரிவாக உருவாக்கப்படும். மந்தைவெளி, மயிலாப்பூரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டி வரும் வீடுகளில், ஆர்.ஏ.புரம் மக்கள் மறு குடியேற்றம் செய்யப்படுவார்கள். ஆர்.ஏ.புரம் உயிரிழப்பே கடைசியாக இருக்க வேண்டும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உயிரிழந்த முதியவர் கண்ணையா குடும்பத்துக்கு தமிழக அரசு சார்பில் ரூ.10 லட்சம் நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது. என்று கூறினார்.




# அரியலூர் அருகே ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலய தேர்த்திருவிழா



அரியலூர், மே.10–

அரியலூர் அருகே, ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலய தேர் திருவிழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே, கொள்ளிடம் ஆற்றின் கரையில் உள்ள, ஏலாக்குறிச்சி கிராமத்தில், வீரமாமுனிவரால் உருவாக்கப்பட்ட, தூய அடைக்கலமாதா ஆலயம் உள்ளது. தமிழக அரசின் சுற்றுலாத் துறையால் சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் இந்த தூய அடைக்கல மாதா ஆலய 291–ம் ஆண்டு பெருந்திருவிழா, கடந்த மாதம் கொடியேற்றத்துடன் துவங்கி, நாள்தோறும் சிறப்பு திருப்பலி மற்றும் சிறிய தேரோட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதைத்தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்வாக, நேற்று முன்தினம் இரவு ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலய பங்குத்தந்தை சுவக்கின் தலைமையில், சிறப்பு திருப்பலியும் அலங்கரிக்கப்பட்ட பெரிய தேரோட்டமும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் தேரை வடம் பிடித்து இழுத்து வந்தனர். ஆலயத்தின் நான்கு வீதிகளின் வழியாக வலம் வந்த தேரில், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தூய அடைக்கலமாதா எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலய தேரோட்டத்தை முன்னிட்டு, நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

# திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே பிரபல ரவுடி வெட்டிக் கொலை



திருவள்ளூர் மே.10–

பொன்னேரியில் பிரபல ரவுடி வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக திருவள்ளூர் எஸ்பி வருண்குமார் நேரில் விசாரணை நடத்தினார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வேம்பாக்கம் பள்ளம் பகுதியில் ஜவஹர் என்ற பிரபல ரவுடி வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொலை செய்யப்பட்ட ஜவஹர் மீது 2 கொலை வழக்குகள், கஞ்சா வழக்கு உட்பட பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன் வீட்டில் கஞ்சா வைத்திருந்ததாகவும், நாட்டு துப்பாக்கி வைத்திருந்ததாகவும் கார்த்திக் என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில், தலைமறைவான ஜவஹரை காவல் துறையினர் தேடி வந்தனர். இந்த நிலையில், வேம்பாக்கம் பள்ளம் பகுதியில் ஜவஹரை கத்தியால் குத்தியும், வெட்டியும் கொடூரமாக கொலை செய்த மர்ம நபர்கள் தப்பிச் சென்றனர்.

இது குறித்து தகவல் அறிந்த பொன்னேரி காவல் துறையினர் நிகழ்விடத்திற்கு சென்று விசாரணை செய்தனர். இதனிடையே கொலை செய்யப்பட்ட இடத்திற்கு நேரில் வந்த திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வருண்குமார் விசாரணை நடத்தினார். முன் விரோதம் காரணமாக கொலை நடந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து ஜவஹரின் சடலத்தை மீட்ட காவல்துறையினர் உடற்கூறு ஆய்வுக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து கொலை செய்த மர்ம நபர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தஞ்சாவூரில் தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான மிருதங்க வாத்தியத்தில் சாதனை நிகழ்ச்சி



தஞ்சாவூர், மே.10–

தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான மிருதங்க வாத்தியத்தில் சாதனை நிகழ்ச்சி தஞ்சாவூரில் நடைபெற்றது

தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவிகளில் ஒன்றாக மிருதங்க வாத்தியம் உள்ளது. இதனையடுத்து திருவாளபுத்தூர் சதீஷ்குமார் மற்றும் அவரது மாணவர்கள் 31 பேர் இணைந்து தமிழ் இலக்கிய இலக்கண பாடல்களுக்கு மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக மிருதங்கம் வாசித்து நோபல் வேர்ல்ட் ரெக்கார்ட் சாதனை நிகழ்ச்சியை நடத்தினர். இதில் மாணவர்கள் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி 21ஆம் நூற்றாண்டு வரை உள்ள பாடல்களின் சத்தங்களை வாசித்து சாதனை நிகழ்ச்சியை செய்தனர். இந்த சாதனை நிகழ்ச்சி தஞ்சாவூர் ராஜராஜ சமய சங்க அரங்கில் நடைபெற்றது.

நோபல் புக் ஆப் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த இந்நிகழ்ச்சிக்கு நோபல் புக் ஆப் சாதனை புத்தகத்தின் நடுவர் சினேகா ராஜசேகரன் மற்றும் முன்னாள் மேயர் சாவித்திரி கோபால் உள்ளிட்டோர் பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் திருவையாறு அரசர் கல்லூரி முதல்வர் செல்வகணபதி (ஓய்வு) ஔவை கோட்டம் தலைவர் கலைவேந்தன் உள்ளிட்ட இசை ரசிகர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், மழையூரில் மது எடுப்பு திருவிழாவை முன்னிட்டு காப்பு முனி அய்யனார் கோவிலுக்கு குதிரை எடுப்பு விழா நடைபெற்றது. மழையூர் வேளார் தெருவில் இருந்து சாமி சிலைகள் குதிரைகள் ஊர்வலமாக எடுத்துச் சென்று கோவிலில் வைத்து வழிபட்டனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# மழையூரில் தன்னார்வலர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாம்



கறம்பக்குடி மே.10–

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே மழையூர் தனியார் மஹாலில் வருவாய் துறை, சுகாதாரத்துறை, தீயணைப்புத்துறை சார்பில் மழையூர், தீத்தானிப்பட்டி, வெள்ளாளவிடுதி, எம். தெற்கு தெரு உள்ளிட்ட எட்டு கிராமத்தை சேர்ந்த பொதுமக்களுக்கு பேரிடர் மேலாண்மை குறித்து வருவாய் துறையினர் ஆலோசனை கூட்டம் வாயிலாகவும் கிராம சபை கூட்டம் வாயிலாகவும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு கறம்பக்குடி வட்டாட்சியர் விஸ்வநாதன் தலைமையில் செயல்முறை விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

செயல்முறை விளக்க பயிற்சி குழந்தை ராசு தலைமையிலான தீயணைப்பு துறையினர் பொதுமக்கள் இயற்கை பேரழிவுகளிலிருந்து தற்காப்பு முறைகள் குறித்தும் வெள்ள அபாய காலங்களில் எவ்வாறு மீட்பு பணிகளை பொதுமக்கள் செய்வது என்பது குறித்தும் ஒத்திகை நடத்தி காட்டினர். சுகாதார துறை சார்பில் பேரிடர் காலங்களில் விபத்துகள் ஏற்பட்டால் முதலுதவி என்ன செய்வது என்பது குறித்து வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பழனி பொது மக்களுக்கு எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் இறுதியாக வட்டாட்சியர் விஸ்வநாதன் பயிற்சி பெற்ற 35 நபர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் கறம்பக்குடி வட்டாட்சியர் விஸ்வநாதன், சுகாதார துறை மேற்பார்வையாளர் பழனி, குழந்தை ராசு தலைமையிலான தீயணைப்பு துறையினர், மழையூர் வருவாய் ஆய்வாளர் அன்னக்கொடி, கிராம நிர்வாக அலுவலர் சிந்து, அதிரான் விடுதி கிராம நிர்வாக அலுவலர் உதயசூரியன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் சசிகுமார், ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ்,ஊராட்சி மன்ற தலைவர்கள் கலைச்செல்வி தர்மராஜ், ரெத்தினம், சிவகாமி, ஊராட்சி செயலாளர் முருகையா, வார்டு உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டதில் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதிய பணியாளர்களின் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



தென்காசி மே.10–

தென்காசி மாவட்டத்தில் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதிய பணியாளர்களின் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம் தென்காசி மாவட்டத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்பட 5 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக முதல்வரின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில் சட்டப்பூர்வ ஓய்வு ஊதியம் 7850, மருத்துவப்படி, குடும்ப நல நிதி, குடும்ப ஓய்வூதியம், மருத்துவ காப்பீடு, உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தார். தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தென்காசி மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பும் கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், செங்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடையநல்லூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சேது ராமலிங்கம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சண்முகவேல் முன்னிலை வகித்தார். அலெக்சாண்டர் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக முத்துச்சாமி நன்றியுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ் உத்தரவின் பேரில் கடையநல்லூர் காவல் ஆய்வாளர் விஜயகுமார், கனகராஜன், மற்றும் காவல்துறையினர் பாதுகாப்பு வழங்கினர்.

# மாணவர்கள் செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்: திரைப்பட இயக்குனர் களஞ்சியம் பேச்சு



தஞ்சாவூர், மே.10–

தஞ்சாவூர் பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரியின் தமிழ்த்துறை இணைந்து பாரத் நிலா தாகம் எனும் கலை நிகழ்ச்சியை நடத்தியது. கல்லூரியின் துறைகளுக்கு இடையே நடைபெறும் இக்கலைப் போட்டியானது மூன்று நாட்கள் நடைபெற்றது. பாரத் கலை நிலா தாகம் நிறைவு விழா பாரத் கல்விக் குழுமத்தின் செயலாளர் புனிதா கணேசன் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக சினிமா தயாரிப்பாளரும் தூத்துக்குடி சக்தி விநாயகா இந்து வித்யாலயா தாளாளர் விவேகானந்தன் கல்லூரி மாணவர்களிடம் சிறப்புரையாற்றும் போது பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி நிறுவனர் கணேசன் கூறியது போல் இந்தக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அனைவரும் கல்லூரியில் பட்டம் பெற்று வெளியே செல்லும்போது நீங்கள் வேலையை தேடுபவர்களாக இருக்கக்கூடாது வேலையை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும் என்று எழுதிய வார்த்தைகள் இந்தக் கல்லூரியின் பெருமையை பறைசாற்றுகிறது.

மாணவர்களாகிய நீங்கள் உங்களுக்கு தொலைநோக்கு இலக்கை நிர்ணயிக்க வேண்டும் அப்போதுதான் வாழ்க்கையில் பிற மனிதர்களுக்கு நீங்கள் முன்னுதாரணமாக வாழ முடியும் என்றார். திரைப்பட இயக்குனர் களஞ்சியம் பாரத் கலைநிலா தாகம் நிறைவு விழாவில் மாணவர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையில் செல்போனை தேவைக்கு அல்லாமல் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் தவறினால் உங்களின் முன்னேற்றத்திற்கான பொன்னான காலத்தை நீங்கள் பயன்படுத்தும் செல்போனே விழுங்கிவிடும் என்று பேசினார். பின்னர் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசும் சான்றிதழும் பதக்கமும் கொடுத்து பாராட்டினார்.

முன்னதாக ஒருங்கிணைப்பாளர் IQAC–குறிஞ்சி இணைப்பாளர் பேராசிரியர் சுரேஷ் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றார். பாரத் கல்லூரி இயக்குனர் வீராசாமி வாழ்த்துரையும், காட்சித் தொடர்பியல் துறை தலைவர் செம்பியன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்தார், நிறைவாக தமிழ்த்துறைத் தலைவர் சந்தானம் நன்றி தெரிவித்தார்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# திமுக ஆலோசனை கூட்டம் – பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது



நாகப்பட்டினம், மே.10–

நாகை மாவட்டம் திருமருகல் தனியார் மண்டபத்தில் திருமருகல் வடக்கு ஒன்றிய நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அவைத்தலைவர் விவேகானந்தன் தலைமை தாங்கினார். முன்னாள் ஒன்றிய செயலாளர் செல்வம் முன்னிலை வைத்தார். திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட செயலாளர் கௌதமன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவது:- தமிழக முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்று ஓராண்டு சிறப்பாக ஆட்சி செய்து இந்தியாவின் தலை சிறந்த முதல்வராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதற்கு நன்றி தெரிவிப்பது, தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு ஜூன் 3-ஆம் தேதி கிளை கழகம் தோறும் கட்சி கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும், மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அமைச்சராக்க பரிந்துரை செய்து முதல்வரை கேட்டுக்கொள்கிறோம், கழகத்திற்கு உறுப்பினர் சேர்க்கை நடைபெற இருப்பதால் ஊராட்சி கிளை கழகங்கள் அதிக அளவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும், மாவட்ட செயலாளர் கவுதமன் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக அறிவித்ததற்கு தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பது, கழகம் முன்னோடிகள் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சாலையோர கடையில் 'கூழ்' வாங்கி குடித்த சென்னை மேயர், மாநகராட்சி ஆணையர்

சென்னை, மே.10–

சென்னை கோடம்பாக்கம் மண்டலத்தில் உள்ள சிவன் பூங்காவில் மெகா தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்த சென்னை மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் பின்னர் அருகில் இருந்த சாலையோர தள்ளுவண்டியில் கடையில் 'கூழ்' வாங்கி குடித்தனர்.

இந்த புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக ஆர்ப்பாட்டம்

குத்தாலம்,மே.10:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச்செயலாளர் ராஜ்மோகன் தலைமை தாங்கினார்.




மாவட்ட இணை செயலாளர் வெங்கடேசன், சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் மாவட்டத் தலைவர் கமலநாதன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இதில் மாநிலதலைவர் கலா கலந்துகொண்டு பழைய ஓய்வூதியம் சாத்தியமில்லை என்ற நிதி அமைச்சரின் சட்டமன்ற பேச்சை கண்டித்து பேசினார்.

அப்போது ஒன்றிய செயலாளர் அருள், பொருளாளர் வேம்பு, வருவாய்த்துறை சங்க வட்ட செயலாளர் அல்போன்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியில் வட்ட பொருளாளர் பக்கிரிசாமி நன்றி கூறினார்.

# புதுச்சேரி ஜிப்மர் முன்பு ஆர்ப்பாட்டம்: திமுகவினர் கைது

புதுச்சேரி, மே.10–

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் இந்தி திணிப்பு நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய திமுகவினர் கைது செய்யப்பட்டனர்.

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சிவா தலைமையில் மருத்துவமனை முன்பு 500க்கும் மேற்பட்ட திமுகவினர் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சிவா, உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில் குமார், சம்பத் உள்ளிட்ட ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



▶ புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் ஆய்வு. ஜிப்மரில் இந்தி மொழி கட்டாயத்திற்கு எதிர்ப்புகள் எழுந்துள்ள நிலையில் ஆய்வு. ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் ராகேஷ் அகர்வாலுடனும் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் ஆலோசனை.

# புதிய ஓய்வு ஊதிய திட்டத்தை ரத்துசெய்ய கோரி தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



நாகப்பட்டினம், மே.10–

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு மகளிரணி மாநில குழு துணைத்தலைவர் சித்ரா தலைமை தாங்கினார். மாநில செயற்குழு உறுப்பினர் அற்புதராஜ் ரூஸ்வல்ட், வட்டத்துணை தலைவர் பத்மநாபன் ஆகியோர் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் அரசு ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை வழங்க வேண்டும், காலம் முறை ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இதில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க நிர்வாகிகள் தமிழரசன், ஜோதிலெட்சுமி மற்றும் நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். முடிவில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுவுடையா நன்றி கூறினார்.

புதிய பஸ் நிலையம் வேறு இடத்துக்கு மாற்றமா ?

# கடலூரில் அமைய இருந்த புதிய பஸ் நிலையம் வேறு இடத்துக்கு மாற்றப்படுவதாக கலெக்டர் பாலசுப்பிரமணியம் கூறினார்



கடலூர், மே.10–

கடலூர் திருப்பாதிரிப்புலியூர் பஸ் நிலையத்தில் இருந்து மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. தனியார் பஸ்களும் அதிக அளவில் இயக்கப்படுகிறது. ஆனால் பஸ் நிலையத்தில் இட நெருக்கடி உள்ளதால், அரசு மற்றும் தனியார் பஸ்கள் வந்து செல்ல சிரமமாக உள்ளது.

பஸ் நிலையம் அருகில் பூ மார்க்கெட், பான்பரி மார்க்கெட், ரெயில் நிலையம் உள்ளதால், மக்கள் அதிக அளவில் வந்து செல்கிறார்கள். இது தவிர பள்ளி, கல்லூரி மாணவர்களும் பஸ் நிலையத்திற்குள் காலை, மாலை குவிந்து வருவதால், போதிய இடவசதியின்றி மாணவர்களும் சிரமப்பட்டு வருகின்றனர். இதை தவிர்க்க கடலூரில் புதிய பஸ் நிலையம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள், பொது நல அமைப்புகள், அரசியல் கட்சியினர் கோரிக்கை வைத்தனர்.

அதன்படி புதிய கலெக்டர் அலுவலகம் மேற்கு பகுதியில் கரும்பு ஆராய்ச்சி பண்ணைக்கு சொந்தமான இடத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக 18½ ஏக்கர் நிலம் தற்போது உள்ள மாநகராட்சி நிர்வாகத்திற்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் 26-ந்தேதி ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து ரூ.36 கோடி நிதி ஒதுக்க நிர்வாக அனுமதியும் பெறப்பட்டது. அதன்படி புதிய பஸ் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வந்தது. மேலும் சென்னையில் இருந்து வந்த அதிகாரிகள், பஸ் நிலையம் அமைப்பதற்கான வரைபடம் தயாரித்தல், நில அளவீடு பணிகளை செய்தனர்.

தொடர்ந்து ஆணையாளர் தலைமையில் தனியார் நிறுவனத்தை சேர்ந்த 15 பேர் கொண்ட குழுவினர், அந்த இடத்தில் புதிய பஸ் நிலையம் அமைத்தால், வாகன போக்குவரத்து எப்படி இருக்கும் என்று ஆய்வு மேற்கொண்டனர். மாநகரில் பல்வேறு இடங்களில் வாகனங்கள் கணக்கெடுப்பு பணி நடந்தது.

இந்நிலையில், இந்த இடத்தில் புதிய பஸ் நிலையம் அமையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் நிருபர்களிடம் கூறுகையில்.

கலெக்டர் அலுவலகம் அருகில் புதிய பஸ் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் பஸ் நிலையம் இருந்தால், அதை சுற்றியுள்ள பகுதிகள் வளர்ச்சி அடைய வேண்டும். அதற்கான சூழல் இங்கு இல்லை. ஆகவே புதிய பஸ் நிலையம் அமைக்க உகந்த இடத்தை தேர்வு செய்து வருகிறோம் என்றார். இதன் மூலம் புதிய பஸ் நிலையம் வேறு இடத்துக்கு மாற்றப்படுவது உறுதியாகி உள்ளது.

# பாதுகாப்பு கேட்டு காதல் ஜோடி தஞ்சம்



கடலூர், மே.10–

கடலூர் முதுநகர் சேர்ந்தவர் தனசேகர் விழுப்புரம் மாவட்டம் சொர்ணாவூர் சேர்ந்த காவியா ஆகியோர் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர் அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

நானும் காவியா என்பவரும் கடந்த இரண்டு வருடமாக காதலித்து வந்தோம் இந்நிலையில் பெற்றோர் எங்களின் காதலை ஏற்க மறுத்ததால் காவியாவை கடந்த மே இரண்டாம் தேதி எங்கள் பகுதியில் உள்ள கோவிலில் திருமணம் செய்து கொண்டேன் இதனிடையே காவியா பெற்றோர் மற்றும் உறவினர்கள் கலப்பு திருமணம் என்பதால் எங்களை ஏற்க மறுக்கின்றனர் எங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் எங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

# பல ஆண்டுகளுக்குப் பிறகு பனை பொருள் தயாரிக்கும் பயிற்சி தொடக்க விழா

கடலூர், மே.10–

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் சார்பில் நவீன முறையில் பனை வெல்லம் பனங்கற்கண்டு மற்றும் இதர பனைவெல்ல மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி மற்றும் இலவச உபகரணங்கள் வழங்கும் விழா கடலூர் கடற்கரை சாலையில் உள்ள மண்டல பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.



இதற்கு மாவட்ட ஆட்சியர் பாலசுப்ரமணியம் தலைமை தாங்கி பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியை தொடங்கி வைத்தார். துணை மேயர் தாமரைச்செல்வன் முன்னிலை வகித்தார். விழாவில் மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு இலவச உபகரணங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாநகராட்சி கவுன்சிலர் கண்ணன், வேளாண்மை துறை இணை இயக்குனர் ரவிச்சந்திரன், கதர் கிராமத் தொழில்கள் துறை இயக்குனர் பாலகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இதில் மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் பிரசன்னா, இளையராஜா, மாநகராட்சி கவுன்சிலர் அருள்பாபு, தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் அருண், தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு நிலைய தலைவர் பாலசிங்கம், இயக்குனர் சேகர் கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குனர் தேவ மனோகரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

குத்தாலம் அருகே திருமணஞ்சேரி

# அருள்மிகு கோகிலாம்பாள் சமேத உத்வாகநாத சுவாமி திருக்கோயிலில் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது



குத்தாலம்,மே.10:-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் அருகே திருமணஞ்சேரி அருள்மிகு கோகிலாம்பாள் சமேத உத்வாகநாத சுவாமி திருக்கோயிலில் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

கடந்த 6-ஆம் தேதி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, சுவாமி படி இறங்குதல் நிகழ்ச்சியுடன் தொடங்கி பின்னர் கல்யாணசுந்தரர் சுவாமிக்கு மங்கள ஸ்நானம் செய்யப்பட்டு, உற்சவ தினமான நேற்று கல்யாணசுந்தரர் காசி யாத்திரைக்கு திருஎதிர்கொள்பாடி எழுந்தருளல், மாலை மாற்றுதல், ஊஞ்சல் வைபவம் ஆகியவை நடந்தது.

கோகிலாம்பாள் சமேத உத்வாகநாதசுவாமி திருமணக்கோணத்தில் மணவறையில் எழுந்தருளி, பக்தர்கள் சீர்வரிசை எடுத்தவர, கோயில் தலைமை அர்ச்சகர் உமாபதி சிவாச்சாரியார் திருக்கல்யாண வைபவத்தை நடத்தி வைத்தார். திருக்கல்யாணத்தை முன்னிட்டு மூலவர் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு சந்தனகாப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

இதில் கோயில் செயல் அலுவலர் நிர்மலா தேவி, தக்கார் இளையராஜா, கணக்கர் ராஜகோபால் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கண்டு தரிசனம் செய்தனர். குத்தாலம் இன்ஸ்பெக்டர் வள்ளி தலைமையிலான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இரவு பஞ்சமூர்த்திகள் புஷ்ப பல்லக்கில் வீதியுலா புறப்பாடு நடைபெற்றது. வருகிற 12-ஆம் தேதி விடையாற்றியுடன் உற்சவம் நிறைவு பெறுகிறது. இந்நிகழ்ச்சியில் 5000-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 114 பேருக்கு இலவச வீடு கட்ட பணி ஆணை, முதியோர் உதவித்தொகை சி.என்.அண்ணாதுரை எம்.பி., மு.பெ.கிரி.எம்எல்ஏ வழங்கினர்

திமலை, மே.10–

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த அரட்டவடி ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இருவரும் கலந்து கொண்டு 114 நபர்களுக்கு இலவச வீடு கட்ட பணி ஆணை மற்றும் முதியோர் உதவித்தொகை உத்தரவு படிவம் வழங்கினர்.



இந்த நிகழ்ச்சி அரட்டவாடி, பொரசப்பட்டு மற்றும் தாழையூத்து ஆகிய 3 ஊராட்சிகளும் இணைந்து இந்த அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை ஏற்பாடு செய்தனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை மற்றும் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி ஆகியோர் கலந்துகொண்டு 50 முதியோர் உதவித்தொகை உத்தரவும், 114 குடும்பங்கள் மூன்று ஊராட்சிகளில் சார்ந்த பொதுமக்களுக்கு இலவச வீடு கட்டும் பணி ஆணை வழங்கினர்.

அப்போது செங்கம் சட்டமன்ற உறுப்பினர் பேசியதாவது:- ஓராண்டில் பல்வேறு சாதனைகள் படைத்து, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நான்கு கட்ட பட்டியல் தயார்செய்து ஏழைகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணை தயார் செய்யப்பட்டு அனைத்து ஏழைகளுக்கு இலவச கான்கிரீட் வீடு வழங்கும் திட்டத்தை விரைவில் நடைமுறை படுத்துவார் எனக் கூறினார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை பேசுகையில் தமிழக முதல்வர் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றி, ஓராண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்.

அண்டை மாநில முதலமைச்சர்கள் வாழ்த்தும் அளவிற்கு சிறந்த ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது. தமிழக முதலமைச்சருக்கு பொதுமக்கள் எப்போதும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சகுந்தலா ராமஜெயம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் த. செந்தில்குமார் மாவட்ட பிரதிநிதி அ.ஏழுமலை கூட்டுறவு சங்கத் தலைவர்கள் அன்பழகன், சேட்டு முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழ்ச்சியினை அரட்டவாடி ஊராட்சி மன்ற தலைவர் கி.விஜயகுமார், பொரப்பட்டு ஊராட்சிமன்ற தலைவர் நா.சுந்தர், தாழையூத்து ஊராட்சி மன்ற தலைவர் மு.சௌந்தர், மூன்று ஊராட்சிகளின் துணைத்தலைவர்கள் கோ.கண்ணன், சி.இந்திராசிவா, கார்த்திகேயன், கிராம செயலாளர்கள் திருமலை, சுரேஷ், மகாலிங்கம் மற்றும் கழக தலைவர்கள், உறுப்பினர்கள், 3 ஊராட்சியின் ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சிறப்பாக நடத்தினர்.



# இலங்கையில் டுமீல் எம்பி கொலை அதிபர் ராஜினாமா

# திருட்டு பைக்கில் செல்போன் பறிப்பு தலை சிதறி 2 பேர் பலி





# வீட்டை மீட்டுத்தர கலெக்டரிடம் 80 வயது மூதாட்டி கோரிக்கை


| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 10.05.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10 |

புதுகை வரலாறு நாளிதழ்

10.05.2022 செவ்வாய்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

யுக்தேசுவர் கிரி , இந்திய குரு (பி, 1855) (இ. 1936)



நயந்தரா சாகல் , இந்திய எழுத்தாளர் (பி, 1927)



இராமசாமி பழனிச்சாமி , மலேசிய அரசியல்வாதி (பி, 1949)



ஆ. ராசா , தென்னிந்திய அரசியல்வாதி (பி, 1963)



## இன்றைய நினைவு நாள்

முகம்மது மாக்கான் மாக்கார் , இலங்கை அரசியல்வாதி, தொழிலதிபர் (பி, 1877) (இ. 1952)



கோபிகிருஷ்ணன் , தமிழக எழுத்தாளர் (பி, 1945) (இ. 2003)



டேவிட் குடால் , ஆத்திரேலிய தாவரவியலாளர் (பி, 1914) (இ. 2018)



தோப்பில் முகமது மீரான் , தமிழக எழுத்தாளர் (பி, 1944) (இ. 2019)



புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

## கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

## மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்


**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,

பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

**தொடர்புக்கு: 04322 261577**


**சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்**